## 24

# "மகாப்பெரிய நாள் . . . வருகிறது"

## (6:12-17)

*ஒரு காலத்தில் ஒரு விவசாயி இருந்தார்; அவரை நாம் செல்வராஜ் என்று அழைப்போம். செல்வராஜ் ஒரு கிறிஸ்தவராயிருந்தார், அவர் கர்த்தரை நேசித்தார். கர்த்தருடைய சபை கூடிவரும் ஒவ்வொரு நாளிலும் அவர் அங்கிருந்தார். அது பயிர்நடும் காலமாய் இருந்தாலும்கூட, அவர் ஆராதனைக் கூட்டத்தில் இருந்தார். நாட்டில் மேகங்கள் சூழ்ந்து தமது வயல்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தாலும்கூட, அவர் அப்போதும்கூட ஆராதனைக் கூட்டத்தில் இருந்தார். அறுவடை காலம் நெருங்கி அவர் தமது பயிர்களை அறுத்துச் சேர்ப்பதற்கு ஒருசில நாட்களே இருந்த வேளையிலும், அவர் அப்போதும்கூட தேவனுடைய மக்களுடன் ஆராதித்துக் கொண்டிருந்தார். செல்வராஜின் இந்த உறுதிப்பாடு, அயலகத்திலிருந்த ஒரு அவிசுவாசிக்கு எரிச்சல் மூட்டியது, எனவே அந்த அயலகத்தார், ஒரு பரிசோதனைக்காக வயல் ஒன்றை தனியே ஒதுக்கினார். அவர் அந்த வயலில், செல்வராஜ் ஆராதிக்கச் சென்ற நேரங்களில் மாத்திரம் வேலை செய்தார். அறுவடையைத் தொடர்ந்து, அந்த அயலக நண்பர் செல்வராஜை அழைத்தார். அந்த மனிதர் பணக்கட்டு ஒன்றை மேஜையின்மீது வைத்து, "இது எங்கிருந்து வந்தது என்று உமக்குத் தெரியுமா? இது நீர் தேவனிடத்தில் ஜெபிப்பதற்கு வீணாக்கிக் கொண்டிருந்த நேரங்களில் நான் வேலை செய்த வயலில் இருந்து கிடைத்தது. அந்த வயல், வேறு எந்த வயலைக் காட்டிலும் 30 சதவிகிதம் அதிக பலன் தந்துள்ளது! இதற்கு நீர் என்ன கூறுகின்றீர்?" என்று கேட்டார். பணத்தைப் பார்த்த செல்வராஜ், "அறுவடை வேளையில் எல்லாக் கணக்குகளையும் தேவன் முடிப்பதில்லை என்று கூறுகின்றேன்" என்று பதில் அளித்தார்.*

நமது முந்திய பாடம், ஐந்தாம் முத்திரையின்மீதும் வேதசாட்சிகளாய் மரித்தவர்களின் கூக்குரல் மீதும் மையங்கொண்டிருந்தது: "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்?" (6:10). உண்மையில் தேவன் அவர்களிடத்தில், "கணக்குகளைத் தீர்க்கும்" காலம் இன்னும் வரவில்லை, ஆனால் ஒரு நாளில் அவர் அதைச் *செய்வார்* என்று கூறினார் என்பதாக முடிவு செய்தோம். குற்றம் இழைத்தவர்கள் மனந்திரும்புவதற்கான ஒரு

*வாய்ப்பைக் கொடுப்பதற்காகத் தேவன் தாமதித்தார் என்றும்கூட நாம் சுட்டிக்காண்பித்தோம்.*

*நமது தற்போதய வசனப்பகுதியானது, இதற்கு நேர்மாறாக, தேவனுடைய பொறுமை எல்லைகளைக் கொண்டுள்ளது என்று நாம் அறியச் செய்கிறது. “இனியும் பொறுப்பதில்லை!” என்று தேவன் கூறும் நாள் எவ்வித மாறுபாடும் இன்றி வருகிறது. அது நடக்கும்போது, எபிரெயருக்கு எழுதியவர் கூறுகின்றபடி, “ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே’’ (எபிரெயர் 10:31). இது எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது என்று வெளிப்படுத்தின விசேஷம் 6:12-17 நமக்குக் கூறுகிறது:*

> *அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன், இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது, சூரியன் கறுப்புக் கம்பளியைப்[1] போலக் கறுத்தது, சந்திரன் இரத்தம் போலாயிற்று. அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது,[2] அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது.[3] வானமும் சுருட்டப்பட்ட[4] புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று, மலைகள் தீவுகள்[5] யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்றுபோயின. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத் தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள், அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலை நிற்கக்கூடும் என்றார்கள்.*

*எழுத்தாளர் ஒருவர் இந்தக் காட்சியைப் பின்வருமாறு சித்தரித்தார்:*

> *திடீரெனப் பெருங்குழப்பம் இந்த அண்டத்தைப் பற்றிக்கொள்கிறது. ஒரு பூமியதிர்ச்சி இந்தப் பூமி முழுவதையும் அசைக்கிறது; இதன் உக்கிரத்தை எந்த ஒரு ரிக்டர் அளவையாலும் அளக்க முடியாது இருக்கிறது. சூரியன் முற்றிலுமாக மறைகிறது. உண்மையில், யோவான் “சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது, சந்திரன் இரத்தம் போலாயிற்று. … வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது” (வெளிப்படுத்தின விசேஷம் 6:12, 13) என்று அறிக்கை தந்தார்.*
>
> *உலகமானது பயத்தில் நடுநடுங்கிக் கொண்டிருக்கிறது. பெரிய நகரங்கள் தகர்ந்தன. அரசர்களும், பிரபுக்களும், அதிகாரிகளும், செல்வர்களும், பலவான்களும், அடிமையும் சுயாதீனரும் - பூமியில் விட்டுவைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு மனிதரும் தேவனுடைய கடைசி நியாயத்தீர்ப்பு என்ற பயங்கரத்தில் இருந்து தப்பிக் கொள்ளும்படி ஓடுகின்றனர். அவர்கள் மலைக் குகைகளுக்குத் தப்பி ஓடுகின்றனர். அவர்கள் பாறைகள் மற்றும் குன்றுகளுக்குப் பின்னால் தங்களை மறைத்துக் கொள்கின்றனர். ஆனால் தப்புவதற்கு வழியெதுவும் இல்லை.[6]*

*வெளிப்படுத்தின விசேஷம் 6:12-17ஐ நீங்கள் வாசிக்கையில் உங்கள் சிந்தையில் தோன்றும் வார்த்தை என்ன?* "T" *என்ற எழுத்தைக் கொண்டு தொடங்கும் பல வார்த்தைகள் என் சிந்தைக்குத் தோன்றுகின்றன:* "terror" *மற்றும்* "terrible," "terrifying" *மற்றும்* "terrified," "tormenting" *மற்றும்* "tormented," "trembling" *மற்றும்* "traumatic." *இவ்வசனப்பகுதி உங்களிடத்தில் விட்டுச் செல்லும் முழுமையான மனப்பதிவு என்ன? "இது நடக்கும்போது நான் இருப்பதை விரும்பவில்லை!" என்பதே நான் கொண்டுள்ள முழுமையான மனப்பதிவாக உள்ளது.*

*இது தேவனுடைய விரோதிகளுக்குத்*[7] *தரப்படும் தற்காலிகத் தண்டனையைக் குறிக்கிறதா அல்லது இது காலத்தின் முடிவில் உலகத்திற்கு நடைபெறவிருக்கும் கடைசி அழிவைக் குறிக்கிறதா என்பது பற்றி கலந்துரையாடுவதில் விளக்கவுரையாளர்கள் ஈடுபட்டுள்ளனர். நாம் அந்த விஷயத்தை எடுத்துரைப்போம், ஆனால் இது எல்லைக்கு உட்பட்ட தனிச்சிறப்புக் கொண்ட ஒரு கேள்வியாக உள்ளது. நான் டெக்ஸாஸின் கிளெபர்ன் என்ற இடத்தில் வசித்தபோது, வசந்தகாலமானது உக்கிரமான புயலையும் பெரிய அழிவையும் கொண்டு வந்தது: மரங்கள் வேருடன் பிடுங்கப்பட்டன; அடையாளப் பலகைகளும் வேலிகளும் புரட்டிப் போடப்பட்டன; வியாபாரமும் வீடுகளும் சேதமடைந்தன.*[8] *ஒரு புயலைத் தொடர்ந்து உள்ளூர்ச் செய்தித்தாள்கள், சூறாவளிக்காற்று எதுவும் தொட்டிருந்ததில்லை என்று எந்தவித மாற்றமும் இன்றி அறிவிக்கும்; சூறாவளிக்காற்றுப் போன்ற காற்றுகளை மாத்திரமே நாங்கள் அனுபவித்திருந்தோம். "இது என்ன வேறுபாட்டை ஏற்படுத்துகிறது?" என்பதே எனது பதிலாயிருந்தது. உங்கள் வீடு தகர்க்கப்பட்டு இருந்தால், அந்த சேதாரமானது சூறாவளிக் காற்றினால் தாக்கப்பட்டதா அல்லது சூறாவளி போன்ற காற்றினால் தாக்கப்பட்டதா என்பது உங்களுக்கு எந்தவிதமான வேறுபாட்டை ஏற்படுத்துவதாய் இருக்கும்? அதுபோலவே, - அது இப்போதோ அல்லது கிறிஸ்து வரும்போதோ, எப்போதாயினும் தேவகோபம் தேவகோபமாகவே இருக்கிறது, என்னை நம்புங்கள், நீங்கள் அதை அனுபவிக்க விரும்ப மாட்டீர்கள்!*

## *நாள் சித்தரிக்கப்பட்டது (6:12-17)*

*வசனங்கள் 12 முதல் 17 வரையிலான பகுதியானது, இயல்பாகவே இரண்டு பாகங்களாகப் பிரிந்துள்ளது: அண்டம் துகள்களாக நொறுங்கிப் பறக்கும் சித்தரிப்பு (வசனங்கள் 12-14) மற்றும் பயமடைந்த மனிதர்களைப் பற்றிய சித்தரிப்பு (வசனங்கள் 15-17). ("தேவகோபத்தின் மகாநாள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) முதலில் நாம் அண்டத்தின் பேரழிவைப் பற்றிக் கண்ணோக்குவோம்.*

### ***அழிவின் நாள் (வசனங்கள் 12-14)***

*6:12-14ஐப் பற்றிய சொல்லாக்கத்தை நான் முதன்முதலில் கேள்விப்பட்டதை விரிவாக நினைவில் வைத்துள்ளேன். நான் பத்து அல்லது*

*பதினோரு வயதான பையனாக, ஆக்லஹாமாவின் ராக்கி என்ற இடத்தில் வாழ்ந்தேன். எனது வகுப்பு நண்பன் ஒருவன், உலகமானது அந்த நாளில் முடியப்போகிறது - அதாவது, சூரியன் கறுப்பு நிறமாகும், சந்திரன் இரத்தம்போலாகும், நட்சத்திரங்கள் பூமியில் விழும் - என்று ஒரு பிரசங்கியார் கூறியதைக் கேட்டதாகச் சொன்னான். அவன் அதை என்னிடத்தில் கூறியபின், நான் விளையாட்டு மைதானத்தில் இருந்த ஊஞ்சல் ஒன்றில் சாய்ந்து கொண்டு, ஆகாயத்தை உற்றுப் பார்த்து, சூரியன் கறுப்பு நிறமாகவும், சந்திரன் இரத்தம்போலவும் மாறும்போது எப்படிக் காணப்படுமென்று கற்பனை செய்தேன். சற்று நேரம் கழித்து, எனக்குச் சலிப்பு உண்டாயிற்று. எனவே பையன்கள் செய்வது போல, நான் மீண்டுமாக விளையாடத் தொடங்கினேன். பிரசங்கியார் முன்னு ரைத்திருந்ததுபோல் உலகம் முடிந்துவிடவில்லை என்பது அடுத்த நாளுக்கு முன்னதாகவே எனக்குத் தெரிந்தது.[9]*

*வசனங்கள் 12 முதல் 14 வரையுள்ள பகுதியானது உலகம் எவ்வாறு முடிவடையும் என்பதற்கு நேரடி அர்த்தம் கொண்ட சித்தரிப்பாக உள்ளதா? இப்போதுள்ள உலகமானது கர்த்தர் மறுபடியும் வரும்போது அழிக்கப்படும் என்று வேதாகமம் வலியுறுத்தினாலும், இவ்வசனப்பகுதியின் விஷயங்கள் அனேகமாக அப்படியிருப்பதில்லை:*

> *கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். ... அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம் (2 பேதுரு 3:10-12).*

*வெளிப்படுத்தின விசேஷம் 6:12-14ன் கற்பனையுருவமானது நிச்சயமாகவே, வானவியல் அழிவு[10] பற்றிய வேதாகமத்தின் போதனைக்குப் பொருந்துகிறது - ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 6ல் உள்ள சில விபரங்கள் நேரடியானவைகளாய் இருக்க முடியாது. உதாரணமாக, நட்சத்திரங்கள் பூமியில் விழுமா? நட்சத்திரங்கள் பூமியைவிடப் பலமடங்கு பெரியவைகளாய் உள்ளன; அவைகள் நேரடியான அர்த்தத்தில் "பூமியின்மீது" விழமுடியாது.*

*வசனங்கள் 12 முதல் 14 வரையுள்ள பகுதியானது உலகத்தின் முடிவைக் கண்ணோக்குவதற்காகத் தரப்படவில்லை என்றால், இப்படிப்பட்ட அளவியல் மொழிநடையை யோவான் பயன்படுத்தும்படிக்கு பரிசுத்த ஆவியானவர் கொண்டிருந்தது ஏன்? யோவான் தமது வாசகர்களுக்குப் பழக்கமான அடையாளத்துவத்தைப் பயன்படுத்தினார்: இது வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிற அடையாளத்துவமாக, மக்களின் வாழ்வில் தேவன் இடையிட்டார் (அல்லது இடையிடுவார்) என்பதின் அடையாளத் துவமாக உள்ளது!*

*இவ்வசனப்பகுதியானது பழைய ஏற்பாட்டின் சொற்றொடர்களினு டைய ஒன்றிணைப்பைப் பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, நீங்கள் எசேக்கியேல் 38:19 மற்றும் பிறவசனப்பகுதிகளில் பூமியதிர்ச்சியின்*

*அடையாளத்துவம் ஒன்றைக் காண்பீர்கள்.*[11] *பூமியதிருதல் என்பது, அசைக்கப்பட இயலாதது என்று மக்கள் கருதுவது அசைக்கப்படுவதை உணர்த்தி நிற்கிறது. நாம்,* terra firma, *அதாவது "உறுதியான/திடமான பூமி" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின்றோம். "திடமான" பூமியானது நமது பாதங்களின்கீழ் அதிருகிறபோது, நாம் திகில் அடைகின்றோம். இறைவெளிப்பாட்டு எழுத்தாளர்கள், மக்கள் சார்ந்துள்ளவற்றின் நீக்கத்தை அடையாளப்படுத்துவதற்காகப் பூமியதிர்ச்சியை பயன்படுத்தினர். இன்றைய நாட்களில் நாம், மனிதகுலத்தைப் பாதிக்கிற நினைவில் நிற்கும்/ குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளைக் குறிப்பதற்கு "பூமியை அதிரச்செய்யும்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின்றோம்.*

*மற்ற சில உருவகங்களும் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப் பட்டுள்ள, இவைகள் இதேபோன்ற செய்தியைத் தெரிவிக்கின்றன: சூரியன் இருளாவதையும் சந்திரன் இரத்தம்போலாவதையும் யோவேல் குறிப்பிட்டிருந்தார் (யோவேல் 2:31),*[12] *மற்றும் நட்சத்திரங்கள் அகற்றப்படு தலையும் வானம் "சுருட்டப்படுவதையும்" பற்றி ஏசாயா உரைத்திருந்தார் (ஏசாயா 34:4). மலைகள் அசைக்கப்படுதல் என்ற உருவகத்தை எரேமியா பயன்படுத்தினார் (எரேமியா 4:24),*[13] *அதே வேளையில் தீவுகள் அழிக்கப்படுதல் பற்றி எசேக்கியேல் எழுதினார் (எசேக்கியேல் 27:35).*[14] *தேவனை எதிர்த்திருந்தவர்களுக்குக் காத்திருந்த பயங்கரத்தைச் சித்தரிப்பதற்கு யோவான், தமது காலத்தில் வாழ்ந்த மக்களைப் பயமுறுத்துவதாக அவர்கள் கற்பனை செய்திருந்த ஒவ்வொரு விஷயத்தையும் ஒன்றாகக் குவித்தார்!*[15]

*ஜான் பௌமன் அவர்கள், வசனங்கள் 12முதல் 14வரையுள்ள பகுதியின் சொல்லாக்கத்தைப் பற்றிக் கலந்துரையாடியபோது, அவர் (எனது முடிவுப்படி) துரதிர்ஷ்டவசமான வார்த்தைகளின் தெரிந்துகொள்ளுதலைப் பயன்படுத்தினார். அவர், "இந்த வானவியல் நிகழ்ச்சிகளை அவற்றிற்குச் சொந்தமானவைகளினிமித்தமாக மிகத்தீவிரமாக எடுத்துக்கொள்ளக் கூடாது" என்று எழுதினார்.*[16] *நான், "இந்தக் காட்சியை நேரடி அர்த்தம் கொண்டதாக எடுத்துக்கொள்வது அவசியமல்ல, ஆனால் இதைத் தீவிரமானதாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறுவேன். இது கலாத்தியர் 6:7ன் சத்தியத்தினுடைய விரிவான நினைவூட்டுதலாக உள்ளது: "தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்."*

***பரிதவிப்பின் நாள் (வசனங்கள் 15, 16)***

*அடுத்த வசனங்களில் நாம், வானவியல் அழிவில் இருந்து அதன் செயல்விளைவுக்குக் கடந்து செல்கின்றோம்: "பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான் களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகை களிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு"*[17] *(வசனம் 15).*

*வசனம் 15ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏழு வகுப்புகள் மனிதகுலம் முழுவதையும் (அதிலும் குறிப்பாக, தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து*

நிற்பவர்களை) உள்ளடக்குகிறது[18]. இதை யோவான் எழுதிய காலத்தில், மக்கள் ''பூமியின் இராஜாக்கள்'' என்று வாசிக்கும்போது, அவர்கள் பேரரசரான டொமீஷியனையும் அவரது விருப்பம் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின்கீழ் ஆட்சிசெய்து கொண்டிருந்த துணை அரசர்களையும் நினைப்பார்கள். ''பெரியோர்கள்'' என்ற சொற்றொடர், அரசியல் ஆட்சியாளர்களாய் இராத (ஆனால்) அதிகாரம் மிகுந்த மனிதர்களைச் சுட்டிக்காண்பிக்கிறது.[19] CEV வேதாகமத்தில் ஆர்வமிக்க ஒரு சொற்றொடர் உள்ளது: the earth's "famous people" [பூமியில் "புகழ்பெற்ற மனிதர்கள்"]. ''சேனைத்தலைவர்கள்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "ஆயிரத்திற்கு அதிபதி" என்பதன் பன்மை வடிவமாக உள்ளது. பீட்டர்ஸன் அவர்களின் பொழிப்புரையில் "generals"[20] ["உயரதிகாரிகள்"] என்றுள்ளது.

"ஐசுவரியவான்கள்" என்ற சொற்றொடர், சுயவிளக்கம் கொண்டதாக உள்ளது. "பலவான்கள்" என்பது உடல்ரீதியாகப் பலம் வாய்ந்தவர்களை யல்ல, ஆனால் நாட்டில் பலத்த செல்வாக்கைச் செயல்படுத்தியிருந்தவர் களைக் குறிக்கிறது. உதாரணமாக, இது இந்தியாவில் புகழ்பெற்ற நிறுவன அதிபர்களையும் விளையாட்டு வீரர்களையும் உள்ளடக்கும்.[21] இவ்விதமாக யோவான், அரசியல் தலைவர்களையும், இராணுவத் தலைவர்களையும், சமூகத் தலைவர்களையும் குறிப்பிட்டார். D. T. நைல்ஸ் அவர்கள் பின்வருமாறு கூறினார்,

> ... பதவியினால் பயன் ஒன்றும் இல்லாதிருந்தது. பூமியின் அரசர்களுக்கும்கூடப் பாதுகாப்பு இல்லாது இருந்தது. செல்வந்தர் களின் செல்வம் பாதுகாப்பு எதையும் அளிக்கவில்லை, பலவான்களின் அதிகாரம் சமாதானத்தை அளிக்கவில்லை ... எல்லாருடைய வாழ்வின் அடிப்படைகளும் தகர்க்கப்பட்டிருந்தன, மனிதர்கள் பயத்தினால் தங்களை ஒளித்துக் கொண்டிருந்தனர் ... வாழ்வின் சாதனைகள் என்ற முகமூடிகளும் நம்பிக்கைகளும் களையப்பட்ட நிலையில் அவர்கள் தேவனுக்கு முன்பாக நிற்கப் பயந்து கொண்டிருந்தனர்.[22]

''அடிமைகள் சுயாதீனர் யாவரும்'' என்பது இந்தப் பட்டியலின் முடிவில் வருகிறது. "சுயாதீனர்" என்பவர், சுதந்திரம் பெற்றிருந்த, ஆனால் இன்னமும் வாழ்வதற்கு வழியை அரிதாகப் பெற்றிருந்த ஒரு முன்னாள் அடிமையாயிருந்தார். அடிமைகளும் சுயாதீனமுள்ளவர்களும் அந்த நாட்களில் சமூக ஏணியில் அடிநிலையில் இருந்தனர், அவர்கள் வழக்கமாக, மற்ற ஐந்து வகுப்பினருடனும் கொஞ்சம் அல்லது ஒன்றுமே சம்பந்தப் படாதவர்களாக இருந்தனர். இருப்பினும் தேவனுடைய கோபத்தின் முன்னிலையில், சமூக வித்தியாசங்கள் மறக்கப்பட்டிருந்தன. தேவன் தமது கிருபையை அளிக்கின்றபோது "பட்சபாதம் காட்டுவதில்லை"; அவர் தமது கோபத்தை ஊற்றும்போதும் பட்சபாதம் காண்பிப்பதில்லை. (நடபடிகள் 10:34; ரோமர் 2:9-11ஐக் காணவும்.)

பெரியவர்களும் சிறியவர்களும் பயமடைந்தபோது, அவர்கள் ஒளிந்துகொள்ள முயற்சிசெய்தனர். ஆண்டவரின் மீதான பயமானது

மக்கள் ஒளிந்துகொள்வதற்கே எப்போதும் காரணமாகியிருக்கிறது. ஆதாமும் ஏவாளும் தேவனிடத்தில் இருந்து ஒளிந்து கொள்ள முயற்சி செய்தனர் (ஆதியாகமம் 3:8). யோனா தீர்க்கதரிசி ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமல் போனபோது, அவர் தேவனுடைய சமூகத்தில் இருந்து தப்பிச்செல்ல முயற்சி செய்தார் (யோனா 1:3). ஒவ்வொருவரும் கண்டறிந்துள்ளபடி, தேவனிடத்தில் இருந்து ஒளிந்துகொள்ளுதல் என்பது சாத்தியமற்றதாக உள்ளது (சங்கீதம் 139:7-12). இருப்பினும், குற்றமுள்ளவர்கள் ஒளிந்து கொள்ள முயற்சி செய்வதில் இன்னமும் பிடிவாதமாயிருக்கிறார்கள். யோவானால் பட்டியல் இடப்பட்டவர்கள், ‘‘பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக் கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: ‘நீங்கள் எங்கள் மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள் ... என்றார்கள்’ ” (வசனங்கள் 15, 16).[23]

‘‘மரணத்திற்கு அல்ல ஆனால் தேவனுடைய சமூகத்தில் வெளிப் படுத்தப்படுதலுக்கே பாவிகள் மிகவும் பயப்படுகின்றனர்.’’[24] ஒளித்துக் கொண்டிருந்தவர்கள், மரணமானது தங்களைத் தெய்வீகப் பிரசன்னத்தில் இவ்வளவு சீக்கிரமாய்ப் புகுத்தும் என்பதைத் தங்கள் அறியாமையினால் உணர்ந்தறியாது இருந்தனர் (20:12)!

வசனம் 16ல் உள்ள ஒரு சொற்றொடரானது விளக்கத்திற்காக உரத்துக் கூவுகிறது: ‘‘ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்.’’[25] ஆட்டுக்குட்டியானவருடைய கோபம் என்றால் என்ன? முரட்டுத்தனம் இல்லாமை என்ற விஷயத்தைத் தெரிவிக்க ஒரு சுவரொட்டியை வைக்க நீங்கள் ஒரு மிருகத்தைத் தேர்ந்து கொள்ள வேண்டும் என்றால், ஆட்டுக்குட்டி என்பது மிகச்சிறந்த தேர்ந்து கொள்ளுதலாக இருக்கும். இனிமையான, விளையாட்டுத்தன்மை நிறைந்த ஒரு ஆட்டுக்குட்டியானது எவரொருவரையும் அல்லது ஏதொன்றையும் வேண்டுமென்றே துன்புறுத்துவதைக் கற்பனை செய்து பார்க்க யாராலாவது முடியுமா? ஒருவேளை நீங்கள் ஒரு கிராமப்புறத்தில் நடந்து செல்வதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள், அங்கு ஒரு மனிதர் ஒரு சிறுகுன்றின் பின்னால் பயந்து மறைந்திருக்கின்றார், தமது இயல்புநிலையை வெளிக்காட்ட அஞ்சுகின்றார். ‘‘என்னவாயிற்று?’’ என்று நீங்கள் கேட்கின்றீர்கள். அவர் நடுநடுங்கிய குரலில், “ஒரு ஆட்டுக்குட்டி என்னைத் துரத்துகிறது!’’ என்று பதில் அளிக்கின்றார். அந்த மனிதனை “பைத்தியக்காரர்” [‘‘crackers’’[26]] என்று ஆஸ்திரேலியாக்காரர்கள் கூறுவர். நீங்கள் செய்தித்தாளை எடுத்து வாசிக்கும்போது, தலைப்புச் செய்தியானது, ‘‘ஆட்டுக்குட்டியால் தாக்கப்பட்ட மனிதர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்’’ என்று கூறினால், அந்தச் செய்தித்தாள் ஏப்ரல் 1ம் தேதியில் வெளியிடப்பட்டதா என்று அறிவதற்கு நீங்கள் அதன் தேதி உள்ள பகுதியைச் சோதிப்பீர்கள்.[27]

சிலவிஷயங்கள் மனதை உறைய வைக்கின்றன, பின்பு “ஆட்டுக்குட்டி யானவரின் கோபம்” என்ற சொற்றொடரைப் பற்றிய விஷயம் வருகிறது.[28]

*ஒரு ஆட்டுக்குட்டி நம்மீது கோபம் கொண்டுள்ளது என்ற நிலையானது, எதிர்பார்க்கப்படாத ஒன்றாக, செல்லப்பிராணி அல்லது அன்பான பிள்ளை, நம்மீது எதிர்த்துத் திரும்பும் நிலையைப் போன்றதாக உள்ளது. இந்தப் பொருத்தமற்ற தன்மையானது, தேவனிடத்தில் இருந்து தங்களை ஒளித்துக்கொள்ள முயற்சி செய்தவர்களின் பாவத்தினுடைய ஏராளத் தன்மையை வலியுறுத்துகிறது. ஒரு ஆட்டுக்குட்டியைக்கூட கோபம் கொள்ளுமளவுக்கு இயக்குவதாக இருந்த அந்தப் பாவம் எவ்வளவு பெரியதாய் இருக்க வேண்டும்!*

*இந்த அண்டம் முடிந்து போவதையும் அவிசுவாசிகளின் பெருவருத்தத்தையும் நாம் கண்ணோக்குகையில், வேதசாட்சிகளாக மரித்தவர்களின் "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்?" என்ற கேள்விக்கு (6:10) கர்த்தரின் பதிலை நாம் காண்கின்றோம். அவர்களைத் துன்புறுத்தியவர்கள் மனந்திரும்புவதற்குப் போதுமான காலத்தை, அவர்கள் தங்கள் வழிகளை மாற்றிக்கொள்வதற்கு போதுமான காலத்தைக் கர்த்தர் கொடுப்பார். இருப்பினும் கடைசியில் அவர் நியாயந்தீர்ப்பார்; கடைசியில் அவர் பழிவாங்குவார். முடிவில், தேவன் "பட்சிக்கிற அக்கினியாய்" (எபிரெயர் 12:29) இருப்பார்!*

## *நாள் கலந்துரையாடப்பட்டது (6:17)*

***கொஞ்சமே பொருட்படுத்தப்படுவதாக உள்ள ஒரு கேள்வி: எப்போது?***

*நமது பாடம் தொடருகையில், "இது தேவன் ரோமப்பேரரசை அழிப்பதைப் பற்றிப் பேசுகிறதா? அல்லது காலத்தின் முடிவில் அவர் இந்த அண்டத்தை அழிப்பதைப் பற்றிப் பேசுகிறதா?" என்பதை அறிந்து கொள்ளும்படி வலியுறுத்துகிற ஆர்வம் மிகுதியான குரல்களை நான் கேட்டுள்ளேன். இந்தக் கேள்வியின்மீது விளக்கவுரையாளர்கள் ஓரளவு சமமாகப் பிரிந்துள்ளனர்.*[29]

*6:12-17ல் உள்ள கூற்றுக்கள், ரோமப்பேரரசைத் தேவன் தூக்கி எறிதலைக் குறிப்பிடக்கூடும். முன்பு கொடுக்கப்பட்ட - பூமியதிர்ச்சிகள், சூரியன் இருளாகுதல், சந்திரன் இரத்தமாகுதல் மற்றும் நட்சத்திரங்கள் விழுதல் பற்றிப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் பேசியது பற்றிய-குறிப்புக்களில், எழுத்தாளர்கள் வழக்கமாக, தேவனை எதிர்த்த மக்களினங்களின் (அதாவது, பாபிலோன், அசீரியா மற்றும் பிற நாடுகளின்) மீது வரவிருந்த தற்காலிகமான தண்டனையைப் பற்றி முன்னுரைத்தனர். கடந்த காலத்தில் தேவன், வெற்றிகொள்ள இயலாதவைகளாகக் காணப்பட்டிருந்த மக்களினங்களை அழித்திருந்தார் என்று யோவானின் வாசகர்கள் நினைவூட்டப்படுவார்கள். அதுபோலவே தேவன், ரோமாபுரியை அழிப்பதில் இடர்ப்பாடு எதையும் கொண்டிருக்க மாட்டார்.*

ரோமப்பேரரசின் தோல்வி என்பது, வேதசாட்சிகளாக மரித்தவர்களின் "தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்?'' என்ற கூக்குரலுக்கு, நிச்சயமாகவே ஒரு நேரடியான, தனிப்பட்ட வகையிலான மற்றும் திட்டவட்டமான பதிலாய் இருக்கும். ரோம அரசானது கிறிஸ்தவர்களின் இரத்தத்தைச் சிந்தியிருந்த படியால், ரோம அரசு தண்டிக்கப்பட வேண்டும் என்று தெய்வீக நீதி வற்புறுத்தியது. இதன் தொடர்பாக, வெளி. அதிகாரங்கள் 17முதல் 19வரை வாசித்துப் பாருங்கள். மகா பாபிலோன் (அதாவது, ரோமாபுரி[30]) அழிக்கப்பட்ட பின்பு, பரலோகத்தில் ஒரு திரளான கூட்டத்தார், 19:1ஆ, 2ல் உள்ள பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தேவனைத் துதித்தனர்: ''இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது, அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக்கொடுத்து, தம்முடைய ஊழியக் காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே." இவ்வசனங்கள், 6:10ன் வேண்டுகோளுடன் நேரடியாகத் தொடர்புடையவை என்று பலர் நம்புகின்றனர், இதில் அவர்கள் சரியானவர்களாய் இருக்கலாம்.[31]

இதற்கு மறுபுறத்தில், 6:12-17 வசனப்பகுதியானது "தேவகோபத்தின் மகாநாளாகிய'' கடைசி நாளைக் குறிக்கிறது என்ற விஷயமும் ஏற்படுத்தப்படலாம். இந்த நிலைப்பாட்டை மேற்கொள்கின்றவர்கள், பின்வரும் சாட்சியங்களை/ஆதாரங்களை அளிக்கின்றனர்: (1) இவ்வசனப்பகுதியைப் போல், அழிவின் உருவகங்கள் எல்லாவற்றையும், பழைய ஏற்பாட்டின் எந்த வசனப்பகுதியும் ஒன்றிணைத்துத் தருவதில்லை. (2) இந்த உருவகத்தின் குறிப்பிட்ட சில அம்சங்கள், உலகத்தின் முடிவில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளை நமக்கு நினைவூட்டுகின்றன. இவற்றில், மனிதகுலம் முழுமையும் ஒன்றுகூட்டப்படுதல் (2 கொரிந்தியர் 5:10) மற்றும் பிதாவையும் குமாரனையும் உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளுதல் (பிலிப்பியர் 2:11) ஆகியவை உள்ளடங்குகின்றன. (3) ஆட்டுக் குட்டியானவரைப் பற்றிய குறிப்பிடுதலானது இந்தக் காட்சியைத் தனித்தன்மை வாய்ந்ததாக்குகிறது. இவைபற்றிய பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகள் கிறிஸ்துவை உள்ளடக்கியிருப்பதில்லை.

''நாம் ஜெயம்கொண்டோம்! தேவனுக்கு நன்றி!'' என்ற அறிமுகப்பாடம், வெளிப்படுத்தின விசேஷத்தின் ஏழு பிரிவுகளை வரைக்குறிப்பிட்டது, அந்தப் பிரிவு ஒவ்வொன்றும் "கிறிஸ்துவின் முதல் வருகையிலிருந்து இரண்டாவது வருகை வரையிலும்"[32] உள்ள கிறிஸ்தவ யுகம் முழுவதையும் தன்னில் கொண்டுள்ளது. 6:12-17ன் காட்சியானது, 1:7ல் முன்னதாகவே கொடுக்கப்பட்டுள்ள "இதோ, மேகங்களுடனே வருகிறார், கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக்காண்பார்கள், பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள்''[33] என்ற சித்தரிப்புடன் திட்டவட்டமாகப் பொருந்துவதாக இருக்கும். இந்தக் காரணத்தினால் நான், 6:12-17

வசனப்பகுதியானது மகாகோபத்தின் கடைசி நாளைக் குறிப்பிடுகிறது என்ற கண்ணோட்டத்தை நோக்கிச் சாய்கின்றேன்.

இருப்பினும் இது பெரிய வேறுபாட்டை ஏற்படுத்துவதை என்னால் காண இயலவில்லை. இந்த வசனப்பகுதி, ரோமப்பேரரசின் அழிவைப் பற்றி முதன்மையாகக் குறிப்பிடுகிறது என்றால், இது கடைசி மகாநாளைப் பற்றி முன்னுருவகப்படுத்துவதாகவும் தேவனுக்கு எதிராக நிற்க முயற்சி செய்கின்ற எவருக்கும் ஒரு எச்சரிக்கையாகவும் உள்ளது. இது கடைசி மகாநாளைப் பற்றிப் பேசுகிறது என்றால், இது - ரோமப்பேரரசு உட்பட - ஆண்டவருக்கு எதிர்த்து நிற்கின்ற எவரும் கடைசியில் அவரது கோபத்தை ருசிபார்ப்பார்கள் என்று போதிக்கிறது.

இவ்வசனப்பகுதி தற்காலிகத் தண்டனையைப் பற்றிப் பேசுகிறதா அல்லது நித்திய தண்டனையைப் பற்றிப் பேசுகிறதா என்ற கேள்வி சார்புநிலையில் முக்கியத்துவமற்றதாக உள்ளது. தேவகோபத்தின் மகா நாள் வந்து கொண்டிருக்கிறது என்பதே இவ்வசனப்பகுதியின் வலியுறுத்தமாய் இருக்கிறது. பாபிலோனியர்களுக்குத் தேவகோபத்தின் மகாநாள் ஒன்று இருந்தது, அசீரியர்களுக்குத் தேவகோபத்தின் மகாநாள் ஒன்று இருந்தது, ரோமானியர்களுக்குத் தேவகோபத்தின் மகாநாள் ஒன்று இருந்தது, தேவனுடைய அன்பின் உடன்படிக்கைகளைப் புறக்கணிப்பவர்களாய் இன்றைய நாட்களில் வாழும் யாவருக்கும் தேவகோபத்தின் மகாநாள் ஒன்று இருக்கும் (ரோமர் 2:5; எபேசியர் 5:6)!

நாம், வாழ்வில் கருத்தறிவு எதையாவது ஏற்படுத்துவோம் என்றால், இந்த மாபெரும் முடிவை நாம் கண்ணோக்க வேண்டும். மனித வரலாறு என்பது முடிவற்ற சுழற்சியாக, அர்த்தம் எதுவுமின்றி மீண்டும் மீண்டும் வருவதாக இருப்பதில்லை. மாறாக, வரலாறு என்பது “திட்டவட்டமான இலக்குடன் கூடிய ஒரு பயணமாக” உள்ளது.[34] கடந்து செல்லுகிற நாள் ஒவ்வொன்றிலும் நாம் உலகத்தின் முடிவை - நித்தியத்தை, பரலோகத்தை அல்லது நரகத்தை - அதிகமாய் நெருங்குகின்றோம்! வெளிப்படுத்தின விசேஷம் 6:12-17 போன்ற வசனப்பகுதிகள், துன்மார்க்கரின் வெற்றி குறுகிய ஆயுள் உடையது[35] என்றும் நியாயத்தீர்ப்பு நிச்சயமானது[36] என்றும் அறிவிக்கின்றன! தேவன் தமது சொந்த நோக்கங்களுக்காகத் தமது கோபத்தை தாமதிக்கலாம், ஆனால் தேவகோபத்தின் நாள் வருகிறது - ஒவ்வொரு தனிநபரும் அதற்குத் தம்மைத் தயார் செய்து கொள்வது அவசியமாய் இருக்கிறது!

### அதிகம் பொருட்படுத்தப்படுவதாக உள்ள ஒரு கேள்வி: யார்? (வசனம் 17)

வசனம் 17ல் உள்ள கேள்வியானது அதிகம் பொருட்படுத்தப்படுவதாக உள்ளது: “அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, *யார் நிலைநிற்கக்கூடும்?*”

வசனங்கள் 9முதல் 11வரை உள்ள பகுதியில் சித்தரிக்கப் படுபவர்களுக்கும், வசனங்கள் 15முதல் 17வரை உள்ள பகுதியில் சித்தரிக்கப் படுபவர்களுக்கும் இடையில் நாம் பல நேர்மாறுகளைக் காண்கின்றோம்.

*வேதசாட்சிகளாக மரித்தவர்கள் (உண்மையில்) ''எங்களுக்காகப் பழிவாங்கும்!'' என்று உரத்துக் கூவியிருந்த வேளையில், தயாராக இல்லாதவர்கள் "எங்களை ஒளித்துக்கொள்ளுங்கள்!" என்று கதறினர். துன்புறுதல் அல்ல ஆனால் பாவம் தான் மனிதர்களைத் தேவனிடத்தில் இருந்து பிரித்தது என்பது இன்னொரு நேர்மாறாக உள்ளது. ஒவ்வொரு குழுவினரும் கேட்ட கேள்வி என்பது மிகவும் அழுத்தமான நேர்மாறாக இருக்கலாம்: வேதசாட்சியாக மரித்தவர்கள் "எதுவரைக்கும்?" என்று அறிய விரும்பியிருக்கையில், பயம் நிறைந்தவர்கள் "யார் நிலைநிற்கக்கூடும்?" என்று கதறினர்.*

*''யார் நிலைநிற்கக்கூடும்?'' என்ற கேள்வி இதற்கு முன்பு(ம்) கேட்கப்பட்டிருந்தது. நாகூம், "அவருடைய கோபத்துக்கு முன்பாக நிற்பவன் யார்? அவருடைய உக்கிரகோபத்தில் தரிப்பவன் யார்? அவருடைய எரிச்சல் அக்கினியைப்போல இறைக்கப்படுகிறது. அவராலே கன்மலைகள் பேர்க்கப்படும்'' என்று எழுதியிருந்தார் (நாகூம் 1:6). மல்கியாவும்கூட, "ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார்'' என்று கேட்டார் (மல்கியா 3:2). எஸ்றா ''இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, ... இதோ, நாங்கள் உமக்கு முன்பாகக் குற்றத்திற்குள்ளானவர்கள். இதினிமித்தம் நாங்கள் உமக்கு முன்பாக நிற்கத்தக்கவர்கள் அல்ல" என்று ஜெபித்தபோது (எஸ்றா 9:15) அவர் இந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார். எவரொருவரும் - அதாவது, தயாராயில்லாத எவரொருவரும் - கர்த்தருக்கு முன்பாக நிற்க முடியாது.*

*எட்வர்டு மையர்ஸ் அவர்கள், " 'மற்றும் யார் நிலைநிற்கக்கூடும்' என்பது தேவனுடைய அற்புதமான கிருபையின் சுவிசேஷத்தை மறுதலித்தவர்களின் முற்றான நம்பிக்கையற்ற நிலையை விளக்கப்படுத்து கிறது. இது தேவபக்தியற்ற ஒவ்வொரு வாழ்வின் நிறைவான அர்த்தத்தைக் களவு செய்கிற பேரழிவுள்ள கேள்விக்குறியாக உள்ளது" என்று விளக்கம் அளித்தார்.[37]*

*நமது அடுத்த இரண்டு பாடங்களில் நாம், தேவபக்தியுள்ளவர்கள்மீது தேவன் கொண்டுள்ள அக்கறையைப் பற்றியும் அவர்களுக்கு அவர் பலன் அளித்தல் பற்றியும் பேசுகிற அதிகாரம் 7ஐப் படிப்போம். வசனம் 9ல் நாம், "ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள் ... சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்குதல்" பற்றி வாசிக்கின்றோம். வேதசாட்சியாக மரித்தவர்கள், "எது வரைக்கும்?" என்று கூக்குரலிட்ட வேளையில், உபத்திரவப்படுத்தியவர்கள் நின்று கொண்டிருக்கையில், உபத்திரவப்படுத்தப்பட்டவர்கள் மரித்தவர் களாய்த் தெருக்களில் கிடந்தனர். இருப்பினும் முடிவில், துன்மார்க்கர் தேவனுடைய கோபத்தினால் வீழ்ந்துபோயிருக்கையில், தேவனுடைய மக்கள் நிலைநிற்பார்கள்!*

## முடிவுரை

*பல ஆண்டுகளுக்கு முன்பு, சகோதரர் வில் தாம்ஸன் அவர்கள், "மகாநாள் வருகிறது" என்ற தலைப்பில் ஒரு பாடலை எழுதினார். அதன் செய்தியானது இன்னும் என்னை அசைக்கிறது:*

*மகாப்பெரிய நாள் ஒன்று வருகிறது,*
*மகாப்பெரிய நாள் வருகிறது,*
*மகாப்பெரிய நாள் ஒன்று சமீபித்து வருகிறது;*
*பரிசுத்தர்களும் பாவிகளும், வலது இடது புறங்களில்*
*பிரிக்கப்படுவார்களே,*
*அந்த நாளின் வருகைக்கு நீ ஆயத்தமாய் இருக்கின்றாயா?*

*வெளிச்சமான நாள் ஒன்று வருகிறது,*
*வெளிச்சமான நாள் வருகிறது*
*வெளிச்சமான நாள் ஒன்று சமீபித்து வருகிறது;*
*ஆனாலும் கர்த்தரை நேசிப்பவர்களுக்கு மாத்திரம்*
*அந்த வெளிச்சம் வருமே,*
*அந்த நாளின் வருகைக்கு நீ ஆயத்தமாய் இருக்கின்றாயா?*

*கவலையான நாள் ஒன்று வருகிறது,*
*கவலையான நாள் வருகிறது*
*கவலையான நாள் ஒன்று வருகிறது;*
*பாவி, "அகன்றுபோ, உன்னை நான் அறியேன்" என்ற*
*தன் அழிவுக்குரிய தீர்ப்பை கேட்பானே,*
*அந்த நாளின் வருகைக்கு நீ ஆயத்தமாய் இருக்கின்றாயா?*[38]

*கர்த்தர் மறுபடியும் வரும்போது, அது உங்களுக்கு "ஒரு மகா நாளாக," "ஒரு ஒளிமிக்க நாளாக," இருக்குமா? அல்லது அது "ஒரு கவலையான நாளாக" இருக்குமா? அந்த நாள் வருவதற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கின்றீர்களா? நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களிலேயே இருந்தால், நீங்கள் ஆயத்தமாக இருக்கவில்லை என்றே ஆகிறது. சமீபத்தில் கிளென் பேஸ் அவர்கள் பின்வரும் கூற்றை உறைத்தார்:*

*பாவம் உங்களை நீங்கள் விரும்புவதற்கும் அதிகமான தூரத்திற்கு கூட்டிச்செல்லும்.*
*பாவம் உங்களை நீங்கள் விரும்புவதற்கும் அதிகமான நேரம் இருக்க வைக்கும்.*
*பாவம் உங்களை நீங்கள் செலுத்த விரும்புவதற்கும் அதிகமாகச் செலுத்தச் செய்யும்.*
*பாவம் உங்களை நீங்கள் கற்பனை செய்வதற்கும் அதிகமாகத் துன்பப்படுத்தும்.*[39]

*மக்கள் தேவனுடைய கோபத்தில் இருந்து ஒளிந்து கொள்ள முயற்சி செய்யும்போது, இந்த உலகின் பாறைகள் பரிதாபத்திற்கு உரிய வகையில் போதுமற்றவைகளாக உள்ளன. காலங்கள் தோறும் நிலைநிற்கின்ற*

கற்பாறையான இயேசு கிறிஸ்துவே,[40] தேவகோபத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஒரே பாதுகாப்பிடமாக இருக்கின்றார். இயேசுவே, "இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவரு மாயிருக்கிறார்" (1 தெசலோனிக்கேயர் 1:10). நீங்கள் அவருக்கு உங்கள் வாழ்வை அர்ப்பணித்து இருக்கின்றீர்களா? நீங்கள் உங்கள் சித்தத்தை அவரது சித்தத்திற்கு ஒப்புவித்து இருக்கின்றீர்களா? இல்லையென்றால், இன்றே அவர்மீது நம்பிக்கை வைத்து அவருக்குக் கீழ்ப்படியுங்கள்![41]

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*முந்திய பாடத்தில் ஒரு எளிய வரைபடம் பயன்படுத்தப்பட்டது:*

**இந்த உலகத்தில்**




*இந்தப் பாடத்துடன் தொடர்புடைய வகையில், அந்த வரைபடம் (பின்வருமாறு) திருத்தம் செய்யப்பட முடியும்:*

**இனிவரும் உலகத்தில்**




*இந்தப் பாடத்திற்கான சாத்தியக்கூறுள்ள பிற தலைப்புக்களில், "ஆட்டுக்குட்டியானவரின் கோபம்," "நீங்கள் தேவனிடத்தில் இருந்து ஒளித்துக்கொள்ள முடியாது!" மற்றும் "யார் நிலைநிற்கக்கூடும்?" என்பவைகள் உள்ளடங்குகின்றன.*

*ஐந்தாம் மற்றும் ஆறாம் முத்திரைகளைப் பற்றி ஒரே எடுத்துரைப்பில் கூறிமுடிப்பதை விரும்பித் தேர்ந்து கொண்டால், உங்கள் பாடத்தை நீங்கள், "சரியான வழியும் தவறான வழியும்" என்று அழைக்கலாம். ஐந்தாம் முத்திரையானது, "உபத்திரவத்திற்கு மறுசெயல்புரியச் சரியான வழி" என்பதை விவரிக்கக்கூடும்: (1) உபத்திரவம் பற்றிக் கவலைப்படுதல்*

*சரியானதாகவே உள்ளது. (2) உபத்திரவம் வருகிறபோது, தேவனிடத்தில் இருந்து புறம்பே திரும்புவதற்குப் பதிலாக, தேவனை நோக்கித் திரும்புங்கள். (3) நீங்களே பழிவாங்காதிருங்கள், அதற்குப் பதில், அப்படிப்பட்ட விஷயங்களைத் தேவனிடத்தில் விட்டுவிடுங்கள். ஆறாம் முத்திரையானது, "நியாயத்தீர்ப்புக்குத் தயாராவதற்குத் தவறான வழி" என்பதை விவரிக்கக்கூடும்: (1) நியாயத்தீர்ப்பு வரும்வரைக்கும் ஒன்றும் செய்ய வேண்டாம். (2) வாழ்வில் உங்கள் நிலையானது உங்களைத் தேவகோபம் தாக்கமுடியாததாக ஆக்குகிறது என்று நினைத்துக் கொள்ளுங்கள். (3) நியாயத்தீர்ப்பு வரும்போது, ஒரு பள்ளம் பறித்து அதற்குள் தவழ்ந்து செல்ல முயற்சி செய்யுங்கள்.*

*அதிகாரம் 6ஐ ஒரே பாடத்தில் கூறிமுடிக்க நீங்கள் விரும்பித் தேர்ந்து கொண்டால், மெரில் C. டென்னீ அவர்கள் பின்வரும் வரைக்குறிப்பைக் கொண்டுள்ளார்: (1) வரலாற்றின் சவுக்கடிகள் (முதல் நான்கு முத்திரைகள்), (2) பரிசுத்தவான்களின் உபத்திரவம் (ஐந்தாம் முத்திரை), (3) பரலோகம் அசைதல் (ஆறாம் முத்திரை).[42]*

*''இடர்ப்பாடு பற்றி ஏழு கருத்துக்கள் கொண்ட தேவனுடைய பிரசங்கம்'' என்பது, அதிகாரம் 6க்கான ஆர்வமிக்க இன்னொரு அணுகுமுறையாக இருக்கும். சாத்தியக்கூறுள்ள பிரதானக் கருத்துக்கள் பின்வருமாறு: (1) இடர்ப்பாடு - இதற்கு நீங்கள் தப்பிக்கொள்ள முடியாது! (முதலாம் முத்திரை); (2) இடர்ப்பாடு உங்கள் இருதயத்தை உடைந்து போகும்படி செய்யமுடியும் (இரண்டாம் முத்திரை); (3) இடர்ப்பாடு உங்கள் ஆவியை முறிந்து போகும்படி செய்யமுடியும் (மூன்றாம் முத்திரை); (4) இடர்ப்பாடு உங்களின் வாழ்வை எடுத்துக்கொள்ள முடியும் (நான்காம் முத்திரை); (5) இடர்ப்பாடு (விசுவாசிகளுக்கு) இருமடங்காக வருகிறது (ஐந்தாம் முத்திரை); (6) பொருட்படுத்தப்படக்கூடிய ஒரே இடர்ப்பாடு அவிசுவாசிகளின்மீது வருகிறது (ஆறாம் முத்திரை); (7) இன்றைய நாளின் இடர்ப்பாட்டை நீங்கள் தாங்குவதற்குத் தேவன் உதவுகின்றார் மற்றும் அவர் இடர்ப்பாடு இல்லாத நாளைய தினத்தையும் வாக்களிக்கின்றார்! (அதிகாரம் 7). இந்த அணுகுமுறையானது 6ம் அதிகாரத்துடன் பயன்படுத்தப்பட்டிருந்தால், நீங்கள் ஏழாவது கருத்தை மாத்திரம் குறிப்பிட்டு, அதிகாரம் 7ன் மீதான தொடர்ந்து வரவிருக்கும் பாடத்தின்மீது ஒரு ஆர்வத்தை ஏற்படுத்த விரும்பலாம். இது, முதல் நான்கு கருத்துக்கள் காலையிலும், கடைசி மூன்று கருத்துக்கள் மாலையிலும் பிரசங்கிக்கப்படும் ஒரு இருபகுதிப் பிரசங்கமாக இருக்கவும் முடியும்.*

---

*குறிப்புகள்*

[1]*சணல் துணி* [sack cloth] *(இது தமிழில் "கறுப்புக் கம்பளி" என்றுள்ளது) என்பது சாக்குகள் செய்வதற்குப் பயன்படும் முரட்டுத் துணியாக இருந்தது, ஆனால் இது, புலம்புதலின்போது அணிந்துகொள்ளும் உடைகள் தயாரிக்கவும் பயன்பட்டது. குறிப்பிட்ட இந்த சணல் துணி என்பது கறுப்பு ஆடுகளின் முடியில் இருந்து*

*தயாரிக்கப்பட்டது என்பது தெளிவு.* [2]*இந்த அத்திக் காய்கள், "குளிர்காலத்தின்போது காய்க்கின்றவைகளாக, இருப்பினும் பக்குவம் அடையாமல், வசந்த காலத்தில் கீழே விழுகின்ற வகையைச் சேர்ந்தவைகளாக" இருந்தன* (Homer Hailey, *Revelation*: *An Introduction and Commentary* [Grand Rapids, Mich.: Baker Book House, 1979], 198). *இதைப் பற்றிக் கலந்துரையாடும்போது, உங்கள் பகுதியில் பலத்த காற்று அடிக்கும்போது கீழே விழுகின்ற எந்த மரத்தைப் பற்றியாவது விவரியுங்கள். காற்று பலமாய் வீசும்போது, இறந்துபோன மரக்கிளைகளும் ஊசியிலைக் கூம்புகளும் எனது முற்றத்தில் விழுகின்றன.* [3]*நட்சத்திரங்கள் விழுதல் என்பது, முக்கியமான நபர்களின் வீழ்ச்சியைக் குறிப்பிடுகிறது என்று சிலர் நினைக்கின்றனர். பழைய ஏற்பாட்டில் சிலவேளைகளில், மாபெரும் மனிதர்கள் நட்சத்திரங்கள் என்று பேசப்பட்டனர். இருப்பினும் வெளிப்படுத்தின விசேஷம் 6ல், நட்சத்திரங்கள் விழுதல் பற்றிய உருவகமானது முழுமையான சித்தரிப்பின் ஒரு பாகமாக மாத்திரம் உள்ளது, இது அதற்கப்பால் தனிச்சிறப்பு எதுவும் கொண்டிராதிருக்கலாம்.* [4]*ஒரு புத்தகச்சுருளானது சுருட்டி வைக்கப்பட்டிருக்கும் என்பதால், அது திறந்து வைக்கப்பட வேண்டுமென்றால், அது விரித்து வைக்கப்பட வேண்டியதாய் இருந்தது. காய்ந்துபோன, நொறுங்கிப் போகக்கூடிய கையெழுத்துப்பிரதியொன்று விரித்து வைக்கப்பட்டிருந்தால், அதன் முனைகள் திரும்பச் சுருண்டு கொள்ளுவதாய் இருக்கும். இவ்விதமாக, ஆகாயமானது பிரிந்து துண்டாகி சுருட்டப்படுவதாகச் சித்தரிக்கப்படுகிறது. யூஜின்* H. *பீட்டர்ஸன் அவர்கள் தமது பொழிப்புரையில், பெரும்பாலான வாசகர்களுக்கு நன்கு பழக்கமான ஒரு உருவகத்தைப் பயன்படுத்தினார்:* The "sky snapped shut like a book" [*"வானம் ஒரு புத்தகம் போல் அடித்து மூடப்பட்டது"*] (*The Message: New Testament With Psalms and Proverbs* [Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995], 618). *ஒரு புத்தகத்தை வலிந்து மூடுதல் மூலம் இதை ஒரு காட்சி விவரிப்பாகப் பயன்படுத்த நீங்கள் விரும்பலாம்.* [5]*மலைகளும் தீவுகளும் நெருங்கிய வகையில் உறவுகொண்டுள்ளன; ஒரு தீவு என்பது, கடலில் இருந்து மேல் நீட்டிக்கொண்டுள்ள மலை என்று மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது. இந்த சந்தர்ப்பப்பொருளில், "தீவு" என்ற சொற்றொடர் அனேகமாக, பூமியதிர்ச்சியில் பூமியின் எந்த ஒரு பாகமும் தப்பிக்காது என்பதை வலியுறுத்தலாம்; தீவுகள் என்பவை பூமியில் தொலைவில் உள்ள இடங்களாக நினைக்கப்பட்டிருந்தன.* [6]Billy Graham, *Approaching Hoofbeats: The Four Horsemen of the Apocalypse* (New York: Avon Books, 1985), 241. [7]*வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இது ரோமப்பேரரசுக்குத் தரப்பட்ட தண்டனை என்று சிலர் நினைக்கின்றனர்.* [8]*ஆறு ஆண்டுகள் காலத்தில், எனது மனைவியும் நானும் ஜன்னல் கண்ணாடிகள், வாயில்கள், வெளியில் இருந்த உடைபடும் பொருட்கள் மற்றும் இரண்டு கூரைகள் ஆகியவற்றை மாற்ற வேண்டியிருந்தது.* [9]*கிறிஸ்துவின் மறுவருகை பற்றி மிகச் சரியான காலத்தை யாரேனும் ஒருவர் முன்னுரைப்பதை நீங்கள் கேள்விப்படும் எந்த வேளையிலும், அவ்வாறு முன்னுரைப்பவர் ஒரு கள்ளத் தீர்க்கதரிசி என்று நீங்கள் அறிய முடியும் (மத்தேயு 24:36-44).* [10]*இப்போது நாம், ஒவ்வொரு பொருளும் இயக்கத்தில் உள்ள அணுக்களால் ஆனவையென்றும் இந்த அணுக்களைத் தனியே பிரித்து பறக்கச் செய்யமுடியும் என்றும் அறிந்திருப்பதால், வெளிப்படுத்தின விசேஷம் 6:12-14ன் மொழி நடையானது ஒருகாலத்தில் இருந்ததுபோல் வசீகரமானதாக இப்போது இருப்பதில்லை.*

[11]*எரேமியா 4:24; யோவேல் 2:10; ஆமோஸ் 8:8; ஆகாய் 2:6 ஆகிய வசனங்களைக் காணவும்.* [12]*ஏசாயா 13:10; 50:3; எசேக்கியேல் 32:7; ஆமோஸ் 8:9 ஆகிய வசனங்களைக் காணவும்.* [13]*நாகூம் 1:5ஐக் காணவும்.* [14]*எசேக்கியேல் 26:15, 18ஐக் காணவும்.* [15]This sentence was adapted from William Barclay, *The Revelation of*

*John*, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 15. [16]John Wick Bowman, *The First Christian Drama: The Book of Revelation* (Philadelphia: Westminster Press, 1955), 53. [17]*தேவனுக்குப் பயந்து மலைகளிலும் குகைகளிலும் ஒளிந்து கொள்ளுதல் என்ற கருத்து ஓசியா 10:8 மற்றும் ஏசாயா 2:19 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எருசலேமின்மீது இடர்ப்பாடுகள் வரும் என்பது பற்றி இயேசு பேசியபோது, அவர் இந்த உருவகத்தைத் தேர்ந்துகொண்டார் (லூக்கா 23:30).* [18]*ஏழு என்பது முழுமையைக் குறிக்கும் எண்ணாக உள்ளது.* [19]*மூல கிரேக்க வசனத்தில் நேரடி அர்த்தமாக ''பெரிய மனிதர்கள்'' அல்லது "மகாப்பெரியவர்கள்" என்று அர்த்தப்படுகிற கூட்டு வார்த்தையாக உள்ளது. இதே சொற்றொடர், ஒரு முக்கியமான வியாபாரியைக் குறிக்கும் லூக்கா 18:23லும் காணப்படுகிறது. சிலமொழிபெயர்ப்புகள் இந்த வார்த்தையை "பிரபுக்கள்" என்று தரவழைத்துள்ளன.* [20]Peterson, 618.

[21]*உலகில் நீங்கள் வாழும் பகுதியில் மாபெரும் செல்வாக்குடன் உள்ளவர்களைப் பற்றி விவரிப்பைக் கொடுங்கள்.* [22]D. T. Niles, *As Seeing the Invisible: A Study of the Book of Revelation* (New York: Harper & Brothers, Publishers, 1961), 60-61. [23]*நீங்கள் எப்போதாவது, பயமுறுத்தப்பட்ட மிருகம் ஒன்று தன்னை ஒளித்துக்கொள்ள முயற்சி செய்வதைக் கண்டிருந்தால், அதை நீங்கள் இந்த மனிதர்களின் எரிச்சல்மூட்டும் செயலை விவரிக்கப் பயன்படுத்தலாம், எங்களது பூனையானது, எனது மகள் டெபியின், மிகப்பெரியதாகவும், அதிகம் சத்தமிடுவதாகவும் இருந்த புதிய வளர்ப்பு நாயினால் பயமுறுத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி எனது நினைவுக்கு வருகிறது.* [24]Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillan Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 94. [25]*"ஆட்டுக்குட்டியானவரின் கோபம்" என்ற சொற்றொடரில் சில விளக்கவுரையாளர்கள் சிரமம் அடைகின்றனர்; அவர்கள், இவ்வசனப்பகுதியில் இந்தச் சொற்றொடரை விசுவாசிகள் அல்ல ஆனால் அவிசுவாசிகள்தான் பயன்படுத்தினர் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றனர். இருப்பினும், ''தேவனுடைய கோபம்'' என்ற சொற்றொடர் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை அடர்வுள்ளதாக்குகிறது (14:10, 19: 15:1, 7; 16:1; 19; 15; மேலும் 11:18; 16:19ஐயும் காணவும்). தேவனுடைய அரியணை என்பது ஆட்டுக்குட்டியானவரின் அரியணையாகவும் உள்ளது (22:3); ஒருவர் செய்கின்றது எதுவோ அது மற்றவர் (அவர்) செய்யும்படி கூறுவதாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் அடிக்கடி, இயேசு துன்மார்க்கரைத் தண்டிப்பவராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார் (2:16, 22, 23; 17:14; 19:11-21). "ஆட்டுக்குட்டியானவரின் கோபம்" என்ற சொற்றொடர் இந்தப் புத்தகத்தின் எஞ்சிய பகுதியுடன் சீர்பொருந்திய நிலையில் உள்ளது என்று நான் முடிவு செய்கின்றேன்.* [26]"Crackers" *என்பது "பைத்தியம்" என்பதற்கான ஆஸ்திரேலியச் சொல் விளக்கமாக உள்ளது.* [27]*அமெரிக்காவில் ஏப்ரல் 1ம் தேதி,* "April Fool's Day" *(ஏப்ரல் முட்டாள்களின் தினம்) என்று அழைக்கப்படுகிறது, அந்த நாளில் நடைமுறை நகைச்சுவைகள்/சிரிப்பூட்டும் செயல்கள் கையாளப்படும். செய்தித்தாள்கள் தங்களின் ஏப்ரல் 1ம் தேதி வெளியீடுகளில், பொய்யான கற்பனை கதைபோன்ற கட்டுரைகளை வெளியிட்டு, அந்தக் கட்டுரைகளை ''ஏப்ரல் முட்டாள்கள்!'' என்ற வார்த்தைகளுடன் முடிப்பதுண்டு.* [28]*நவீனகாலத்தின் பயங்கரக் கதைகள் சில, எதிர்பாராத விரோதங்களைக் கொண்டுள்ளன: ஒரு பொம்மை, ஒரு குழந்தை அல்லது அதைப் போன்றவைகள். இந்த மறுதலைகளின் வழக்கமான, ஒன்றும் அறியாத தன்மையானது அந்தக் கதைகளைத் தங்கள் உக்கிரத்தினால் இன்னும் அதிக பயங்கரமானவைகள் ஆக்குகின்றன.* [29]*இந்தக் கூற்று ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சி விளக்கவுரையாளர்களை உள்ளடக்குவதில்லை.*

அவர்கள், அதிகாரங்கள் 4முதல் 19வரையுள்ள வசனப்பகுதியானது, பூமியின்மீது (அவர்களின்) கற்பனையான ஏழு ஆண்டு "உபத்திரவ" காலத்தைப் பற்றினது என்ற தங்கள் நம்பிக்கையால் இவ்வசனப் பகுதிக்கு கோணலான விளக்கத்தைக் கொடுத்துள்ளனர். [30]மகாபாபிலோன் என்ற வேசி ரோமாபுரியாகவே இருந்தது என்று பலர் ஒப்புக்கொள்கின்றனர். மகாபாபிலோன் என்பது, "பூமியின் ராஜாக்கள் மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற மகா நகரம்" (17:18) என்பதாக, "ஏழு மலைகளின்" (17:9) மீது அமர்ந்ததாக இருந்தது. ரோமாபுரி இன்னமும் ஏழு மலைகளின்மீதுதான் அமைந்துள்ளது.

[31]நமது வசனப்பகுதியானது ரோமப்பேரரசின் அழிவை திட்டவட்டமாகவும் தனிப்பட்ட வகையிலும் குறிப்பிடுகிறது என்று நம்புபவர்களால் மற்ற விவாதங்களும் பயன்படுத்தப்படுகின்றன. "இது காலத்தின் முடிவில் அண்டத்தின் அழிவைக் குறிப்பிடுவதாக இருக்க முடியாது, ஏனெனில் அது 'ஒரு கண்ணிமைக்கும் பொழுதில்' (1 கொரிந்தியர் 15:52) நடைபெறும்" என்பது ஒரு விவாதமாக உள்ளது. இது அடையாளத்துவமாக இருப்பதாலும், அடையாளம் ஒன்றில் எதுவேண்டுமென்றாலும் நடக்கக்கூடும் என்பதாலும், இந்த விவாதம் மாபெரும் கனம் கொண்டுள்ளதாகக் காணப்படுவதில்லை. "மொழிநடையானது நேரடி அர்த்தமுள்ளதாயிராமல், அடையாளத்துவமாக உள்ளது, ஆகையால் இது இந்த அண்டத்தின் அழிவைக் குறிப்பதாக இருக்க முடியாது" என்பது போதுமான அளவு ஆர்வமுள்ள இன்னொரு விவாதமாக உள்ளது. அந்த விவாதம் இருவகைகளிலும் வெட்டுகிறதான இருபுறமும் கருக்குள்ள பட்டயமாக உள்ளது. வசனப்பகுதியானது தற்காலிகத் தண்டனை பற்றியோ அல்லது நிறைவான தண்டனையைப் பற்றியோ அடையாளத்துவமாக உள்ளது; இவ்வசனப்பகுதி அடையாளத்துவமாக உள்ளது என்ற உண்மையானது இவ்விரு சாத்தியக்கூறுகளில் எதையும் நீக்கிப் போடுவதில்லை. [32]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 25. [33]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "ஆண்டவரே, எதுவரைக்கும்" என்ற பாடத்தில் 1:7க்கான குறிப்புகளைக் காணவும். [34]Owen L. Crouch, *Expository Preaching and Teaching: Revelation* (Joplin, Mo.: College Press Publishing Co., 1985), 123. [35]சங்கீதம் 94:1-7, 21-23ஐக் காணவும். [36]எபிரெயர் 9:27. [37]Edward P. Myers, *After These Things I Saw: A Study of Revelation* (Joplin, Mo.: College Press Publishing Co., 1997), 160. [38]Will L. Thompson, "There's a Great Day Coming," *Songs of the Church*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [39]சகோதரர் பேஸ் அவர்கள் 10, ஆகஸ்டு 1997 புதன்கிழமை மாலையில் ஜட்ஸோனியாவில் உள்ள கிறிஸ்துவின் சபையில் உரையாற்றினார். [40]1 கொரிந்தியர் 10:4ஐக் காணவும்; மேலும் ரோமர் 9:33; 1 பேதுரு 2:8 ஆகியவற்றையும் காணவும்.

[41]இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாக எடுத்துரைக்கப்பட்டால், மாற்கு 16:16; நடபடிகள் 2:38; 22:16; கலாத்தியர் 3:26, 27 போன்ற வசனப் பகுதியைப் பயன்படுத்தவும். மேலும் இது ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், முடிவுரையில் நீங்கள் எபிரெயர் 12:25-29ஐ உள்ளடக்க விரும்பலாம். அவ்வசனப் பகுதியானது, (இந்த பூமி போன்று) அசையக்கூடியவற்றை (இராஜ்யம்/சபை போன்று) அசைக்க முடியாதவற்றுடன் நேர்மாறாக ஒப்பிடுகிறது. உங்கள் உரையைக் கேட்பவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் குடிமக்களாக (வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், சபையில் உறுப்பினர்களாக) இருக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துங்கள். [42]Merrill C. Tenney, *Proclaiming the New Testament: The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 33-35.

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

*1. நீங்கள் வெளிப்படுத்தின விசேஷம் 6:12-17ஐ வாசிக்கும்போது, உங்கள் சிந்தைக்கு வரும் வார்த்தை அல்லது வார்த்தைகள் யாவை? இந்தத் தரிசனம் உங்களிடத்தில் விட்டுச் செல்லும் முதன்மையான மனப்பதிவு என்ன?*

*2. இவ்வசனப்பகுதி நமக்கு, இந்த உலகம் எவ்வாறு முடிவடையும் என்பது பற்றிய விபரமான நேரடி அர்த்தம் கொண்ட சித்தரிப்பைக் கொடுக்கிறதா? ஒவ்வொரு விபரமும் நேரடி அர்த்தம் கொண்டதாயிருக்க முடியாது என்று ஒருவரை நினைக்கச் செய்வது எது?*

*3. சூரியன் இருளாகுதல் மற்றும் நட்சத்திரங்கள் விழுதல் ஆகியவற்றைப் பற்றிப் பேசுகிற பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளின் சந்தர்ப்பப் பொருளை வாசியுங்கள். அந்த வசனப்பகுதிகள் எவற்றை போதிக்கின்றன என்பது பற்றிக் கலந்துரையாடத் தயாராகுங்கள்.*

*4. "இராஜாக்கள்," "பெரியோர்" மற்றும் பிறவாக, வசனம் 15ல் பயன்படுத்தப்பட்டுள்ள பல்வேறு சொற்றொடர்களைப் பற்றிக் கலந்துரையாடவும்.*

*5. மனிதனால் தேவனிடத்தில் இருந்து எப்போதாவது ஒளிந்து கொள்ள முடிந்துள்ளதா? மனிதர்கள் அவ்வாறு செய்ய முயற்சிப்பது ஏன்? நீங்கள் உங்கள் வாழ்வில் எதையாவது கர்த்தரிடமிருந்து ஒளித்து வைக்க முயற்சி செய்திருக்கின்றீர்களா?*

*6. "ஆட்டுக்குட்டியானவருடைய கோபம்" என்ற சொற்றொடர் உங்களுக்கு வினோதமானதாக இருக்கிறதா? இது, இந்தப் பாடத்தை எழுதியவருக்கு வழக்கமற்றதாகத் தோன்றியது ஏன்?*

*7. கலந்துரையாடப்படுகிற வசனப் பகுதியானது ரோமப்பேரரசின் அழிவைப்பற்றியதா அல்லது உலகத்தின் முடிவைப்பற்றியதா? எதைப்பற்றியது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? ஏன்?*

*8. வாழ்வில் கருத்துணர்வை ஏற்படுத்த வெளிப்படுத்தின விசேஷம் 6:12-17 வசனப்பகுதி நமக்கு எவ்வாறு உதவுகிறது?*

*9. இந்தப் பாடத்தின்படி, வசனப்பகுதியில் உள்ளவற்றில் முக்கியமான கேள்வி எது?*

*10. அடுத்த அதிகாரத்தின்படி, தேவன் தமது கோபத்தை ஊற்றும்போது யார் நிலைநிற்பார் (7:9)?*

## மத்தேயு 24 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 6

விளக்கவுரையாளர்கள் அடிக்கடி, மத்தேயு 24ஐ வெளிப்படுத்தின

*விசேஷம் 6உடன் வைத்து, மத்தேயு 24ம் கூட, "யுத்தங்களையும் யுத்தத்தின் செய்திகளையும்," "பஞ்சங்களையும்," மற்றும் கிறிஸ்தவர்களுக்கு ஏற்படும் உபத்திரவங்களைப் பற்றியும் குறிக்கிறது என்று குறிப்பிடுகின்றனர் (மத்தேயு 24:6, 7, 9). இந்தப் பயிற்சியானது - ஒருவர், இரண்டாம் வருகை சமீபித்துள்ளது என்று நமக்குக் கூறுகிற "காலங்களின் அடையாளத்தை" வெளிப்படுத்துதல் என்பதையே மத்தேயு 24 (மற்றும் இதன் இணைவசனப் பகுதிகளான மாற்கு 13, லூக்கா 21) மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 6 ஆகியவற்றின் அடிப்படை நோக்கமாக உள்ளது என்ற தவறான வாக்குறுதியுடன் தொடங்காத வரையிலும் - ஒன்றும் அறியாததாக உள்ளது.*

*மத்தேயு 24:3ல் சீஷர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டனர்: ஒன்று தேவாலயத்தின் அழிவைப் பற்றியதாகவும், இன்னொன்று உலகத்தின் முடிவைப் பற்றியதாகவும் இருந்தன. மத்தேயு 24ன் முதல் பகுதியானது எருசலேமின் அழிவைப் பற்றி அடிப்படையில் எடுத்துரைக்கிறது (வசனங்கள் 15முதல் 20வரையில் காணவும்), அதே வேளையில் அந்த அதிகாரத்தின் கடைசிப் பாகம் இரண்டாம் வருகையின்மீது கவனத்தைக் குவிக்கிறது. வசனங்கள் 6, 7 மற்றும் 9 ஆகியவை உலகத்தின் முடிவைப் பற்றியல்ல, ஆனால் எருசலேமின் அழிவைப் பற்றியே அக்கறை கொள்ளுவதாக உள்ளது.[1]*

*யுத்தங்கள், பூமியதிர்ச்சிகள் மற்றும் பஞ்சங்கள் ஆகியவற்றைப் பற்றிய இயேசுவின் குறிப்புகளை, இரண்டாம் வருகை சமீபமாயுள்ளது எனக்கூறும் அடையாளங்கள் என்ற வகையில் விளக்கப்படுத்துதலானது, அவர் தமக்கே நேரெதிராக உள்ளார் என்று ஆக்குவதாக உள்ளது. அதே அதிகாரத்தில், இரண்டாம் வருகையைப் பற்றி அவர் பேசியபோது, "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்'' என்று அவர் கூறினார் (வசனம் 36) மேலும் அவர், "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷ குமாரன் வருவார்" என்றும் கூறினார் (வசனம் 44அ).*

*இயேசு வருகிறபோது வாழ்வு வழக்கமாக நடந்து கொண்டிருக்கும் என்று அவர் வலியுறுத்தினார் (வசனங்கள் 37-41). "யுத்தங்களைக் குறித்த வதந்திகளும்,'' பஞ்சங்களும், பூமியதிர்ச்சிகளும், உபத்திரவமும் மற்றும் கள்ளப்போதகர்களும், அவரது வருகை உடனடியானதாக உள்ளது என்பதற்கு அடையாளங்களாயிருப்பது இல்லை. மாறாக இவைகள் வாழ்வின் ஒரு பாகமாக உள்ளன - இவை, உலகத்தில் பாவம் வந்ததின் விளைவாக உள்ளன.*

---

*குறிப்பு*

*[1]கிறிஸ்துவின் வாழ்வு என்ற பாடத்தொடரில் நான், மத்தேயு 24ஐப் பற்றி முழுமையாக விவரித்துள்ளேன். "யுத்தங்களும் யுத்தங்களைக் குறித்த வதந்திகளும்" மற்றும் இவை போன்றவை அடையாளங்களே அல்ல என்று உண்மையிலேயே இயேசு கூறினார் என்பதை அதில் நான் குறிப்பிட்டுள்ளேன்.*



**தேவகோபத்தின் மகாநாள் *(6:12-17)***